செய்தி வெளியீடு எண் 04 நாள் 02.01.2017

**கிறித்தவ தேவாலயங்களை பழுதுபார்த்தல் மற்றும் சீரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு அரசு நிதி உதவி வழங்குகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~

தமிழ்நாட்டில் சொந்த கட்டடங்களில் இயங்கும் கிறித்தவ தேவாலயங்களை பழுது மற்றும் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு நடப்பாண்டில் (2016-17) நிதி உதவி வழங்கும் திட்டம் அரசால் உத்திரவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்கான தகுதிகள் : கிறித்தவ தேவாலயம் 10 ஆண்டுகளுக்கு மேலாக சொந்த கட்டடத்தில் இயங்கி இருத்தல் வேண்டும். தேவாலயம் கட்டப்பட்ட இடம் பதிவுத்துறையில் பதிவு செய்திருத்தல் வேண்டும். தேவாலயமும் பதிவு செய்திருக்க வேண்டும். தேவாலயத்தின் சீரமைப்பு பணிக்காக வெளி நாட்டிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெற்றிருத்தல் கூடாது.

திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கும் கிறித்துவ தேவாலயங்கள் இத்திட்டம் குறித்து கூடுதல் விவரம் அறியவும் இதற்கான விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்யவும் **www.bcmbcmw@tn.gov.in** என்ற இணையதள முகவரியை காணவும். கட்டடத்தின் வரைபடம், திட்ட மதிப்பீடு மற்றும் இதர ஆவணங்களுடன் விண்ணபத்தினை பூர்த்தி செய்து திருவள்ளுர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 31.01.2017 அன்று 5.45 மணிக்குள் விண்ணப்பிக்கலாம். மேலும் கூடுதல் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் தரை தளத்தில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை 044-27661888 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.
~~~~~